பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 13 | வெள்ளிக்கிழமை | 29.12.2023 | அதிர்வு 150

## வீட்டுத் திட்டம் பெரும் சர்ச்சை

**யாழ். கூட்டத்தில் வாக்குவாதம்**

(ந.லோகதயாளன்)

"யாழ்ப்பாணத்தில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான 25 ஆயிரம் வீடுகள் அமைக் கப்பட்டாலும் அதன் உரிமை 05

# மக்கள் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தக்கூடிய நபரே தமிழரசுக் கட்சியின் தலைவராக வர வேண்டும்

## வடமராட்சியில் சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு




(வடமராட்சி நிருபர்)

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சி னைகளைச் சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்லக் கூடிய வல்லமை மிக்க நபரே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்குப் பொருத்தமானவர் என்று அக்கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கி யன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத் தில் நேற்று செய்தியாளர்களைச் சந் தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரி விக்கையில், 06

## அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தமிழர்களின் வாக்குகளே தீர்மானிக்கும்

# தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தின் பின்னணியில் ரணில் இருக்கக்கூடும்

## மிகவும் அவதானம் தேவை என்கிறார் சாணக்கியன்

(வடமராட்சி நிருபர்)

**"தமிழ் மக்களுடைய வாக்குகள்தான் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக் கும். எனவே, தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபவர்கள் குறித்து நாம் அனைவரும் மிக வும் கவனமாக இருக்க வேண்டும். அவர்களது உள் நோக்கங்களைப் பார்க்க வேண்டும். இதன் பின் னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கக்கூடும்."**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.** 07



# தமிழரசு மாநாட்டை தடுக்க சம்பந்தன் பெயரில் முயற்சி?

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தை எதிர்வரும் 10ஆம் திகதி கட்சியின் பெரும் தலைவர் இரா.சம்பந்தனின் வீட்டில் நடத்தி கட்சியின் தேசிய மாநாட்டு சர்ச்சைக்குத் தீர்வு காண்பது எனத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது என்று சில செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் 05






வர்த்தகத்துடன் தொடர்புடைய யாழ். அரசியல்வாதியின் குடும்பத்தில் ஒருவர் கொழும்பில் பெருந் தொகை போதைப் பொருளுடன் சிக்கி யமை பற்றிய தகவலை சம்பவம்நடந்துஇரண்டு, மூன்று நாள்களின் பின்னர் சாடமாடை யாகக் குறிப்பிட்டு, இப்பத்தியில் எழுதியிருந் தேன்.

தகவல் கிடைத்தும் பல செய்தியாளர்கள் அம்சடக்காக இருக்க, நானே 06




# வீதியில் திரண்டு கில்மிஷாவை வரவேற்ற யாழ்ப்பாணம் மக்கள்

**(எஸ்.நிதர்ஷன்)**

தென்னிந்தியாவின் ஸீ தமிழ் தொலைக்காட்சி நடத்திய சரிகமப இசை நிகழ்ச்சியில் முதலாமிடம் பெற்று சாதனை படைத்த யாழ். அரியாலையைச் சேர்ந்த ஈழத்து இசைக்குயில் கில்மிஷா நேற்று நாடு திரும்பினார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ். சர்வதேச விமான நிலையம் ஊடாக அவர் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

யாழ். சர்வதேச விமான நிலையத்தில் இருந்து திறந்த காரில் கில்மிஷா அழைத்து வரப்பட்டார். அவரை வீதியெங்கும் திரண்டிருந்த மக்கள் மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர்.

தமிழ் கலாசார பாரம்பரிய நடனங்கள் ஆடப்பட்டு, முத்து சப்பரத்தில் கில்மிஷாவை ஏற்றி ஊர் மக்கள் தூக்கிச் சென்றனர்.

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய முன்றலில் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. சாரங்கா இசைக்குழுவினரின் இசையில் கில்மிஷா சில பாடல்களைப் பாடினார்.














AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING

KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better

CALL NOW
+94 773 776 882
+94 753 770 230





Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.


## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



### "தாயகஒலி" பிரதம ஆசிரியர்

***தம்பு சிவா அவர்களின் (தம்பு. சிவசுப்பிரமணியம்)***

### (அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

**நடத்தும்**

# சிறுகதைப் போட்டி

**இருபிரிவுகளாக நடத்தப்படும்**

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது

2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***

இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# அயல் மாவட்டங்களிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு மேலதிகமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்!

## டெங்கைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுத்த



டெங்கு நோய் நிலைமையை கட்டுப்படுத்த மேலததிகமாக அயல் மாவட்டங்களிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் டெங்கு தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

டெங்குவை காவும் நுளம்புகள் வீரியம் மிக்க நுளம்புகளாக உள்ளன என பூச்சியியல் ஆய்வு சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிகளவான நோயாளர்கள் இருப்பதால் அதனை சூழவுள்ள பகுதிகளிலுள்ளவர்கள் அதிகளவாக அக்கறையுடன் இருக்க வேண்டும். நோய் நிலைமையைக் கட்டுப்படுத்த மேலதிகமாக அயல் மாவட்டங்களிலிருந்தும் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை தற்போது பரவியுள்ள டெங்குத் தொற்றானது மூன்றாவது வகை நுளம்பின் மூலமே பரவுவதாகவும், இது இம்முறையே யாழ்ப்பாணத்தில் பரவியுள்ளதால் மக்கள் மத்தியில் இதற்கான தற்காப்பு வளங்கள் இல்லாதுள் ளன.

இதேநேரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 150 பேர் நாளாந்தம் டெங்கு சிகிச்சைக்காக வருகின்ற நிலையில் நேற்று 84 பேர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இம்மாதம் 1,284 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் – என்றார்.

# நகரில் கடைகள் எரிந்தமைக்கு பின்னணியில் நாசகாரச் செயல்?

## அந்தக் கோணத்திலும் விசாரணை




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.29

யாழ்ப்பாணம் நகரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தீ பரவல் நடவடிக்கை ஓர் நாசகார செயலாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியில் அமைந்திருந்த இரு கடைகளில் நேற்று அதிகாலை தீ பரவல் ஏற்பட்டதனையடுத்து, யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டு, மாநகர சபையின் தீ அணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இந்தத் தீ பரவல் வியாபார நிலையங்கள் இடையில் ஏற்பட்ட போட்டி மனப்பான்மை காரணமாக ஏற்பட்ட விஷமச் செயலாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையிலும் விசாரணைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இளம் தாயும் இரண்டு வயது மகனும் லயன் அறையில் சடலங்களாக மீட்பு



இரத்தினபுரி – அலபத பிரதேசத்தில் உள்ள லயன் அறை குடியிருப்பின் அறை ஒன்றில் இருந்து தாய் மற்றும் அவரது சிறு மகனின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண் தனது மகனைக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், 21 வயதுடைய தாயும் 02 வயதுடைய சிறுவனும் உயிரிழந்துள்ளனர் எனக் கூறியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் உயிரிழந்த பெண்ணின் கணவர் கடந்த சில நாள்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியேறியமை தெரியவந்தது.

இதனையடுத்து சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் அலபத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பண்டிகைக் கால கேக் விற்பனை இந்த முறை பாரியளவில் வீழ்ச்சி!

## வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கம் தகவல்



இம்முறை பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஆண்டு நத்தார் பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் வெதுப்பக உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கப்பெறாத பட்சத்தில், உள்நாட்டு முட்டைகளை 55 ரூபாவுக்கு கொள்வனவு செய்து தயாரிக்கப்படும் கேக்கின் விலையை குறைப்பது என்பது சாத்தியமற்றது எனவும் அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## வீட்டுத் திட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு தனி நிறுவனத்துக்குச் சொந்தமாக இருக்கும் ஆபத்துள்ளது. எனவே, அதனை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது ஒரு நிறுவனம் ஊடாக 25 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்றும், அதில் 30 இலட்சம் ரூபா பெறுமதியில் வீடும், 20 இலட்சம் ரூபா பெறுமதியில் சூரிய மின்கலமும் என்ற வகையில் 50 இலட்சம் ரூபா பெறுமதியில் தலா ஒவ்வொரு வீடும் அமையவுள்ளன என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், "அமைக்கப்படவுள்ள வீடுகளின் மேல் சூரிய மின்கலமும் பொருத்தப்படவுள்ளது. அவ்வாறு பூட்டிய சோலர் மின்சாரம் நிறுவனத்துக்கே சொந்தம். இந்தப் பிரச்சினை தொடர்பில் ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசவில்லை?" – என்று கேள்வி எழுப்பினார்.

"நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கதைக்கவில்லை என்பது எனக்குத் தெரியாது" – என்று கைவிரித்தார் ஆளுநர்.

"என்ன தெரியாது என்கின்றீர்கள். இது தொடர்பாக நானே நேரடியாக உங்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன். அதற்குப் பதில் அனுப்பாமல் நீங்கள் எவ்வாறு தெரியாது எனச் சொல்கின்றீர்கள்?" – என்று மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

இவற்றின் காரணமாக வீட்டுத் திட்டப் பட்டியலை அனுமதிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

இதையடுத்து வீட்டுத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி மீண்டும் கலந்துரையாடி தீர்மானிப்போம் என்று ஆளுநர் கூறினார்.

## தமிழரசு மாநாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

திருகோணமலை கிளைகளை மீளப் புனரமைக்காமல் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த வேண்டாம் என்று இரா.சம்பந்தன் கட்சியின் தலைமைக்குக் கடிதம் அனுப்பியுள்ள நிலையில், இந்த விவகாரத்தை ஆராய நேற்று கட்சியின் சிலச்தலைவர்கள் யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதி அலுவலகத்தில் கூடி இந்த முடிவை எடுத்தனர் என்று கூறப்பட்டது.

இதன்போது, எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி கொழும்பிலுள்ள இரா. சம்பந்தனின் வீட்டில் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தைக் கூட்டி, இந்தச் சிக்கல் தொடர்பில் ஆராய்வது என்றும், மாநாடு தொடர்பில் இறுதியான தீர்மானத்தை அங்கு எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை கூடி புதிய தலைவர் மற்றும் நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் என்றும், ஜனவரி 26 ஆம் திகதி மத்திய செயற்குழு கூடும் என்றும், 27 ஆம் திகதி பொதுக்கூட்டம் இடம்பெறும் என்றும், தொடர்ந்து 28 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு இடம்பெறும் என்றும் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை அலுவலகத்தில் இம்மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனை முதலில் பகிரங்கத்திற்குக் கொண்டு வந்தேன். இப்போது – இன்னும் – அது ஊடகங்களில் வெளிவராத பரகசியமே. எல்லோருக்கும் விடயம் நன்கு தெரியும்.

அந்தத் தகவலை நான் எழுதிய அன்று காலையில் வெளிநாட்டிலிருந்து ஓர் அன்பரும், வெளியூரிலிருந்து ஒரு நண்பரும் தொலைபேசி அழைப்பு எடுத்தனர். உரிமையுடன் கண்டித்தனர்.

"உங்கள் செய்தித் தகவல் சரி என்றால் துணிச்சலுடன் பெயர், விவரங்களைக் குறிப்பிட்டு எழுதுவதுதானே...? அதற்கு ஏன் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றீர்கள்? கிசுகிசுப் பத்திரிகை(க)ள் எழுதுவது போல சாடை மாடை எழுத்தெல்லாம் எதற்கு?" – என்று பாய்ந்தார்கள் விபரீதங்கள் புரியாமல்.

அவர்களின் கேள்விகள் நியாயமானவை என்பதால், ஒருவாறு அன்றைய நிலைக்கு ஏதோ சாக்குப் போக்குப் பதில்களை கூறி சமாளித்துக் கொண்டேன்.

சரி. இன்று அது பகிரங்கமான விடயம். அரசியல் அதிகாரங்களில், பதவிகளில் இருப்பவர்கள் கூட இப்போதும் இந்த விடயத்தை அம்சடக்காகத்தான் பேசுகின்றார்கள். ஊடகங்கள் அதீத மௌனம் காக்கின்றன. நேற்று யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முன்னர் நான் எழுதிய அந்த விடயத்தை ஒட்டிய தொடர் நடவடிக்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகள் – பதில்கள் குறித்து எனது செய்தியாளர் என். லோகதயாளன் தரும் செய்தி அறிக்கையை அப்படியே இங்கே தருகிறேன். அது வருமாறு:–

*யாழ்ப்பாணத்தில் ஒரு போதைப் பொருள் கடத்தல்காரரின் வீட்டைச் சோதனையிட முயன்ற சமயம் சோதனைக்குச் சென்ற பொலிஸாரை மேலதிகாரிகள் திருப்பி அழைத்தனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.*

*யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.*

*இதன்போதே அமைச்சர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அமைச்சர் தொடர்ந்தும் விவரம் தெரிவிக்கையில் –*

*நாடுமுழுவதும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை இடம்பெறுகின்றது. இதன்போது யாழ்ப்பாணத்திற்குப் போதைப் பொருள் கடத்த முற்பட்ட ஒரு பெரும்புள்ளி போதைப்பொருளுடன் கொழும்பில் கைது செய்யப்பட்டார். அவ்வாறு கைது செய்யப்பட்ட கடத்தல்காரரின் யாழ்ப்பாண வீட்டைச் சோதனையிடச் சென்ற பொலிஸாரை சோதனை செய்ய விடாது மேலதிகாரிகள் திருப்பி அழைத்தனர், இது தொடர்பில் பொலிஸார் விவரம் தெரிவிக்க வேண்டும். – எனக் கோரினார்.*

*இதற்குப் பதிலளித்த யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், அவ்வாறு ஏதும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்த போது, "இல்லை. அவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றது உங்களிற்குத் தெரியாமல் இருக்கலாம். யாழ்ப்பாணம் தலைமையக இன்ஸ்பெக்டரிடம் கேளுங்கள்" – என அமைச்சர் மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்தார்.*

*இதற்கமைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையக இன்ஸ்பெக்டரிடம் வினாவியபின் பதிலளிக்கும்போது அங்கே சோதனையிட அனுமதிக்கப் பட்டது எனத் திரும்பவும் கூறினார்.*

*அப்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –*

*"ஆம். சோதனையிட அனுமதிக்கப் பட்டதுதான். முதலில் பொலிஸார் சென்று சோதனையிட முயன்ற சமயம் மேலிட உத்தரவின் பெயரில் திரும்பிச் சென்று, அதன் பின்பு இரு மணி நேரம் கழித்தே திரும்பி வந்து சோதனையிட அனுமதிக்கப்பட்டனர். அதாவது உள்ளே இருந்த பொருள்கள் வெளியே அப்புறப் படுத்திய பின்பு சோதனைக்கு அனுமதிக்கப்பட்டதே உண்மை" – என்றார் .*

*அச்சமயம் அது யாரின் வீடு எனவும் கூறுங்கள் எனக் கூட்டத்தில் இருந்து கோரப்பட்டபோது "அந்தப் பெயரை நான் கூறினால் அது அரசியல் மயப்படுத்தப்பட்டு விடும்" என அமைச்சர் டக்ளஸ் பதிலளித்தார்.*

– இதுதான் எனது செய்தியாளரின் இவ்விடயம் பற்றிய செய்தி அறிக்கை.

சரி, இவ்வளவும் நடந்து முடிந்த பின்னரும் – இவ்வளவு உண்மைகளும் தெரிந்த பின்னரும் – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே சம்பந்தப்பட்ட தரப்பின் பெயரை வெளியிடாத 'அரசியல் தர்மத்தை' காக்கும் போது, ஆரம்பக் கட்டத்தில் முதன் முதலில் அந்தச் செய்தியை – தகவலை – நான் அம்பலப்படுத்திய போது சம்பந்தப்பட்ட தரப்பை நேரடியாகச் சுட்டாமல் சூசகமாகக் கோடி காட்டியமை குற்றமா வாசகர்களே? நீங்களே சொல்லுங்கள்...!

\+ \+ \+

'கறுப்பு எம்.ஜி.ஆர்.' கப்டன் பிரபாகரன் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். ஒரு செய்தியாளனாக அவருடன் இரண்டு நாள்கள் சென்னையில் அவரின் விருந்தினனாகத் தங்கியிருந்து நெருங்கிப் பேசிப் பழகி ஊடாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முப்பத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் – 1988 முற்பகுதியில் – 'பூந்தோட்டக் காவல்காரன்' படப் பிடிப்பு சமயம் இது நடந்தது. அப்போது அவர் திருமணம் செய்யவில்லை. அவருக்குப் பெண் தேடிக் கொண்டிருந்தார்கள். ஈழத் தமிழர்கள் மீது அளவில்லாப் பாசமும் பற்றும் கொண்டிருந்த அவர் பொருத்தமான இலங்கைத் தமிழ்ப் பெண் கிடைத்தால் திருமணம் செய்யவும் தயாராக இருந்தார். அது பற்றியெல்லாம் என்னுடன் விரிவாகப் பேசினார். சென்னையில் 'ஜுனியர் விகடனில்' விசேட பயிற்சி பெறும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளன், விடுதலைப் புலிகளின் தலைமைக்கு ரெம்பவும் பரிச்சயமானவன், தி.மு.க. சார்பான 'தினகரன்' பத்திரிகையுடனும் சேர்ந்து பணியாற்றுபவன் என்ற அன்றைய இளைஞனான என் தகுதி நிலை அப்போது நேரடி அரசியலுக்கு வராத அவருக்கு என் மீது அதிக மதிப்பைத் தந்திருந்தது.

எங்கள் ஊடாட்டம் பற்றிய சில பதிவுகளை வரும் நாள்களில் தருகிறேன்.

## மக்கள் பிரச்சினையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

"தமிழரசுக் கட்சி என்பது ஜனநாயகக் கட்சி. அதன் தலைமைத்துவம் ஜனநாயக ரீதியிலேயே தெரிவு செய்யப்படும்.

கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழரசுக் கட்சிக்கு அடுத்த தலைவர் யார் என்பதை மக்கள் புரிந்து வைத்துள்ளார்கள்.

கட்சியின் தலைவராக வர வேண்டியவர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை சர்வதேச அளவுக்கு எடுத்துச் செல்லக்கூடிய சர்வதேச தொடர்பகள் உள்ள நபராக இருந்தால் மட்டுமே சாத்தியம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் ஊடாகவே அரசியல் தீர்வு காண முடியும். அதற்காகவே தமிழரசுக் கட்சி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில், அரசியல் சாசனம் தொடர்பில் அதீத அறிவு உள்ள நபரே தமிழரசுக் கட்சியின் தலைவராக வர வேண்டும்.

அதிகாரப் பகிர்வினூடாக மட்டுமே எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக வடக்கில் இருக்கின்றார். அவரால் அவருடைய துறை சம்பந்தமான பிரச்சினையை மட்டுமே கையாள முடியும்.

ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு அவரால் தீர்க்க முடியும்? ஆகவே, எங்களுக்கு அதிகாரங்கள் கிடைத்தால் நாங்களே எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

அரசியல் தீர்வுக்காகவே எங்கள் கட்சி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, அரசியல் சம்பந்தமாக பரந்த அறிவு ஆழமாக இருக்க வேண்டியது அவசியம். இதைத் தெரிந்த ஒருவர்தான் கட்சியின் தலைவராக வர முடியும்.

கட்சியின் தலைவராக வருபவருக்குச் சர்வதேச தொடர்புகள் இருந்தால்தான் மாற்றங்களைச் செய்ய முடியும். அத்தோடு இலங்கை அரசுக்கு அழுத்தங்களையும் கொடுக்க முடியும்.

மொழி மட்டும் சர்வதேச தொடர்பில் ஆதிக்கம் செலுத்துவதில்லை. விடயங்களும் தெரிந்திருக்க வேண்டும். அதன் மூலமாக நாங்கள் ஆதரவை எடுத்து நடைமுறைப்படுத்துவதும் முக்கியமாகும். இந்த இரண்டு தகுதிகளும் கட்சியின் தலைவருக்கு அவசியமாகும்.

அவ்வாறான தகுதி என்னிடம் இருந்தால் நானே தலைவர் பதவிக்கு குதித்து விடுவேன். இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் எனக்கும் அந்தத் தகுதி வரலாம்.

நான் எனது பெயரை ஏன் கொடுக்கவில்லை என்றால், எனக்குத் தகுதி இன்னும் வரவில்லை. நான் இன்னும் கற்றுக் கொண்டு இருக்கின்றேன். எனவே, தமிழரசுக் கட்சியின் தலைவராக யார் வர வேண்டும் என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான சூழலில் தனது கட்சியின் தலைவரைத் தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஒவ்வொரு தொகுதியில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ளது. எங்களுடைய கட்சி எங்கள் பிரதேசத்தில் பிளவுபடாமலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கட்சிக்குள் நடக்கும் விடயம் கட்சிக்குள் பிளவு என்பது அல்ல. எனவே, அனைவரும் நிலைமைகளைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்." – என்றார்.

## தமிழ் பொது வேட்பாளர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தை மிகவும் பேசும் பொருளாக மாற்றுவதற்குத் தெற்கினுடைய அரச தரப்பினரும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்கள் தொடர்பில் தென்னிலங்கை ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து அவதானித்து வருகின்றன. அது தொடர்பில் தொலைபேசி ஊடாக எனக்குப் பல அழைப்புக்கள் வந்து கொண்டிருக்கிறன. இதனைப் பார்க்கும்போது தெற்கிலே இருக்கும் பேரினவாத சக்திகள் தமிழ் பொது வேட்பாளர் விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதன் ஊடாக அதனைப் பிரபல்யப்படுத்துவதாகத் தெரிகின்றது.

இதன் பின்னணியில் உள்ள விடயங்களை நாம் பேசியாக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு துரும்புச் சீட்டு. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுடைய வாக்குகள் இன்றி தனியே சிங்கள மக்களின் வாக்குகளால் மட்டும் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம் என்ற நிலை காணப்படும்போது தமிழர் தரப்பில் ஒரு பொது வேட்பாளை நிறுத்தி தமிழ் மக்களுடைய விடயங்களை முன்னிறுத்தி அதற்கு ஆணை கோரும் சர்வஜன வாக்கெடுப்பாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். அதனை நாங்கள் மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு முறைதான் செய்யலாம். அதனை ஒவ்வொரு முறையும் ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் ஒருவரை நியமித்து மக்களிடம் வாக்களிக்குமாறு கோர முடியாது.

கடந்த சில வாரங்களாக இது தொடர்பில் கருத்துத் தெரிவித்து வருபவர்கள் யாரென்று பார்த்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள்தான் இவ்வாறு தெரிவித்து வருகின்றனர். எல்லோரும் இணைந்து கோட்டால் தான் தமிழ் பொது வேட்பாளராகப் போட்டியிடத் தயாராக இருக்கின்றார் என்று முன்னாள் நீதியரசர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்திருந்ததைப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

விக்னேஸ்வரன் ஐயாவினுடைய கடந்த ஒன்றரை வருட காலச் செயற்பாடுகளை அவதானித்துப் பார்த்தால், 2022 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டபோது ஆதரவாக வாக்களித்தவர். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி நடத்திய சர்வகட்சி மாநாட்டின் போது இவருடைய கையிலும் ஜனாதிபதியுடைய கையிலும் பேசப்படப் போகின்ற விடயம் தொடர்பில் ஒரே ஆவணம் இருந்தது. இது அவர்கள் இருவருக்குமான நெருங்கிய உறவை வெளிப்படுத்துகின்றது. நாடாளுமன்ற வாக்கெடுப்புகளின் போதெல்லாம் ஒன்றில் கலந்துகொள்ளாமல் இருந்திருப்பார், இல்லாவிட்டால் ஆதரவாக வாக்களித்திருந்தார். ஒருபோதும் எதிராக வாக்களித்திருக்கவில்லை.

கடந்த வாரம் ஜனாதிபதி நடத்திய கூட்டத்தில், மக்களுடைய கோரிக்கைகள் எதனையும் ஜனாதிபதி நிறைவேற்றவில்லை என்ற காரணத்தால் கலந்து கொள்ளவில்லை என்று சி.வி.விக்னேஸ்வரன் ஐயா அறிவித்திருந்தார். இதன் மூலம் தான் ஜனாதிபதிக்கு எதிரானவர் என்பதனை மக்களுக்குக் காட்டுவதற்கு முற்படுகின்றாரா என்ற சந்தேகம் எழுகின்றது. இந்தப் பின்னணியில்தான் தமிழ் பொது வேட்பாளராக அழைத்தால் போட்டியிடத் தயார் என அவர் கூறியதைப் பார்க்க வேண்டியுள்ளது.

எதிர்வரும் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் அவரவர் கூட்டணி சார்பில் போட்டியிடப் போவதாகப் பகிரங்கமாக கூறியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் மீதமாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரமுன சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் நிலைதான் காணப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினால் பெரும்பான்மை இன சிங்கள மக்களை ரணிலுக்கு வாக்களிக்குமாறு மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாகச் சொல்ல வேண்டும். அவ்வாறு மஹிந்த ராஜபக்ஷவின் நேரடி ஆதரவுடன் மொட்டுக் கட்சியின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறக்கப்பட்டால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவு இல்லை என்பது உறுதியாகத் தெரியும். அதே போன்று இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுடைய வாக்குகளும் அவருக்குக் கிடைப்பது சந்தேகமாகும்.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களுடைய வாக்குகள் இன்னொரு வேட்பாளருக்குப் போகாமல் தடுக்கும் நோக்கில் தமிழ் பொது வேட்பாளர் விடயம் கையிலெடுக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் எழுகின்றது. தமிழ் பொது வேட்பாளர் கணிசமான தமிழ் வாக்குகளைப் பிரித்தால் பெரும்பான்மை இன சிங்கள வாக்காளர்களது வாக்குகள் மூன்றாக பிளவுபடும் நிலை ஏற்பட்டு அவர்களில் போட்டியிடும் நிலை ஏற்படும். இந்தப் பின்னணியில்தான் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபொருளாக்கி நாடிபிடித்துப் பார்க்கும் தந்திரத்தை ரணில் விக்கிரமசிங்க அரங்கேற்றியிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு எழுகின்றது.

தமிழ் பொது வேட்பாளரைத் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்த வேண்டும் என்று நான் கூறிய விடயம் இன்றைய சூழலில் பொருத்தப்பாடில்லாத நிலையே காணப்படுகின்றது. இன்று தமிழ் மக்களுடைய வாக்குகள்தான் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கக் கூடிய இடத்தில் இருக்கின்றது. இந்தப் பின்னணியில் இருந்து தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பேசுபவர்கள் குறித்து நாம் அனைவரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அவர்களது உள்நோக்கங்களைப் பார்க்க வேண்டும்.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஒன்றிணைவுக்கு அவசியம்

“ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் அவசரப்படவேண்டாம் என்றும், தேர்தலை பகிஷ்கரிப்போம் என்றும் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், தமிழர் தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து தேர்தலின் சாதக பாதகங்களை ஆராய்ந்து, நல்ல முடிவை எடுப்பதே தமிழ்த் தேசிய இனத்திற்கு அனுகூலமாக அமையும்.”

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன்.

இந்த விவகாரத்தை ஒட்டி அவர் சொன்ன அடிப்படை விடயங்கள் வரவேற்கத்தக்கவை. அதேசமயம் இந்த அறிக்கையூடாக அவரும் கட்சி அரசியல் செய்ய முற்பட்டிருக்கின்றமையையும் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். அப்படி இதற்குள்ளும் கட்சி அரசியல் செய்ய முற்பட்டால், அவர் கூறும் - ‘தமிழர் தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தல் குறித்து முடிவெடுக்கும்’ - திட்டம் பிழைத்துப் போய்விடும் என்பதையும் நேரத்துடன் சுட்டிக் காட்டலாம் என்று நினைக்கிறோம்.

கட்சித் தலைவர்கள் கூடி என்ன முடிவை எடுத்தாலும் அது கடைசியில் தமிழ் மக்கள் மத்தியில்தான் செயற்படுத்தப்பட வேண்டும். அதுதான் சந்தை. அங்கு தான் விற்க வேண்டும். எப்போதும் கட்சித் தலைவர்களே முடிவெடுத்து தமிழ் மக்கள் மத்தியில் - தலையில் - அதைக் கட்டி விடுவது ஜனநாயகமாக இருக்க முடியாது. முடிவுகளுக்கு முன்னர் குறைந்தபட்சம் மக்களின் கருத்துக்கள் தலைமைகளால் செவிமடுக்கப்படவும் வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழரசு கட்சிக்குள் ஒருமித்த கருத்து இப்போது இல்லாமல், தலைமைச் செயற்பாட்டாளர்களாக இருக்கின்றவர்கள் ஊடகங்களில் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள் என்று குற்றம் கூறுவது போன்று அதைக் குறிப்பிடுகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். அது தவறு.

மற்றைய கட்சிகள்போல நிரந்தரத்தலைவர்களையும், குடும்ப வாரிசுகளையும் கொண்டு நடத்தப்படும் கட்சி அல்ல தமிழரசு. அது ஜனநாயகக் கட்சி. ஜனநாயக கட்சியில் எப்போதுமே பன்மைத்துவக் கருத்துக்கள் இருக்கும். தலைமையில் இருப்பவர்கள் அவற்றைப் பிரதிபலித்துக் கொண்டிருப்பர். பிரதிபலிக்க வேண்டும். அவை பற்றிய உள்கட்சி விவாதம் - கருத்து பரிமாறல் - அடிப்படை உறுப்பினர்கள் வரைத் தாராளமாக இடம் பெறும். அது தவறில்லை. ஒரு வகையில் அதுதான் ஆரோக்கியமான ஜனநாயகம்.

இறுதியில், இப்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிடும் தலைமைச் செயற்பாட்டார்கள் எல்லோரும் ஒன்று கூடி ஒரு தீர்மானத்திற்கு வருவர். அதற்குப் பின்னர் சுரேஷ் கூறிய விதத்தில் முரண்பாடான கருத்துக்கள் வெளியானால்தான் அது கட்டுப்பாட்டை மீறிய விடயமாகும்.

அடுத்து ‘சம்பந்தன் கூறுவது போன்று தேர்தல் அறிவிக்கும் வரையிலும் - வேட்பாளர் அறிவிப்பு வெளியாகும் வரையிலும் - காத்திருந்து கடைசி நிமிடத்தில் இதனை செய்ய முடியாது’ என்று சுரேஷ் கூறிய விடயத்தைக் கவனிக்க வேண்டும்.

சுமார் 45 வருடங்களுக்கு மேல் தமிழர் அரசியலில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் சுரேஷ் பிரேமசந்திரன் அரசியல் எதிர்ப்பை காட்டுவதற்காக இப்படிக் கருத்து வெளியிடக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழர் தரப்பு தனது சீட்டுகளை நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்து, எதிர் தரப்புக்குக் காட்டாமல், மறைத்து விளையாட வேண்டும் என்று இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டு இருந்தோம். அதுதான் சம்பந்தரின் கருத்தின் உட்கிடையான விளக்கம்.

சிங்களத்தின் வேட்பாளர்கள் அறிவிப்புக்கு முன்னர் தமிழர் நிலைப்பாடு முடிவாகிவிட்டால் - அது பகிரங்கமாகிவிட்டால் - சிங்களத்தில் பேரினவாதிகளின் ஒன்று திரள்கைக்கு - 2010லும் 2019 இலும் நடந்த அதே நிலைமைக்கு - அது வாய்ப்பாகிவிடும்.

தமிழர் தரப்பின் ஆதரவு யாருக்கு என்பது தொடர்பில், இறுதி நேரம் வரை சிங்களத் தரப்புகளுடன் மாறி மாறிப் பேரம் பேசி இழுத்தடிப்பது அதிகபட்ச உச்சப் பேரத்துக்கு வசதி செய்யும் - தவிர்க்க முடியாத - ராஜதந்திரமாக அமையும்.

சில சமயங்களில் தமிழர் தரப்பில் எட்டப்படும் தீர்மானங்களைக் கூட வெளியில் தெரிவிக்காமல் - பகிரங்கப்படுத்தாமல் - மூன்றாம் தரப்பின் ஈடுபாட்டுடன் உறுதிப்படுத்தி, அமைதி பேண வேண்டியும் நேரிடலாம்.

கனன்று கொண்டிருக்கும் பேரினவாதத் தணலை, வாக்களிப்புக்கு முன் பெரும் தீச்சுவாலையாக கொளுந்து விட்டெரியப் பண்ண வாய்ப்பளிக்காமல் தந்திரமாகத் தமிழர் தரப்பு அரசியல் செய்ய வேண்டும்.

அதற்கான தமிழர் ஐக்கியம் என்பது இத்தகைய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, மாறுபட்ட நிலைப்பாடு உடைய தமிழ் கட்சிகளைத் தந்திரமாக தண்டிக்க முயலாத - கண்டிக்க எத்தனிக்காத - குறை சொல்ல விழையாத - அறிவிப்புகள் மூலமே சாத்தியமாகும். அதனை சுரேஷ் பிரேமச்சந்திரன் கவனத்தில் கொள்வது நல்லது.

# விஜயகாந்தின் இறுதி ஊர்வலம் இன்று: தலைமை கழக வளாகத்தில் நல்லடக்கம்!



மறைந்த பிரபல நடிகரும் அரசியல் வாதியுமான விஜயகாந்தின் உடலம் கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று தொண்டர்கள், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டது.

கோயம்பேட்டில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் விஜயகாந்தின் உடலம் நேற்று வைக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இருந்து திரைப்பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

விஜயகாந்தின் உடலுக்கு முதலில் நடிகர் கவுண்டமணி அஞ்சலி செலுத் தினார். இதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழிசை சவுந் தரராஜன், வி.கே. சசிகலா, சென்னை மாநகராட்சி முன்னாள் நகராதிபதி சைதை துரைசாமி, திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி, நடிகர்கள் மன்சூர் அலிகான், பிரபு, சூரி, ஆனந்த்ராஜ், இயக்குனர்கள் டி.ராஜேந்தர், விக்ரமன், ஏ.ஆர்.முருகதாஸ், பேரரசு, கவிஞர் வைரமுத்து ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

விஜயகாந்தின் உடலுக்கு நடிகர் விஜய் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

விஜயகாந்த் உடல் வைத்திருக்கும் கண்ணாடி பேழை மீது கை வைத்து கண்ணீர் விட்ட நடிகர் விஜய், பிரேமலதா வின் கரங்களை பிடித்து ஆறுதல் கூறி யுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப் பாடி பழனிசாமியும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இதற்கிடையில், நடிகர்கள் சூர்யா, செந்தில், விஷால் உள்ளிட்ட பலரும் காணொளி ஒன்றை வெளியிட்டு இரங் கல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, விஜயகாந்தின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியில் இருந்து மதியம் 1 மணி வரை சென்னை தீவுத்திடலில் வைக்கப்படுகிறது என்று தே.மு.தி.க. தலைமைக் கழகம் அறி வித்துள்ளது.

இது தொடர்பாக தே.மு.தி.க. தலை மைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் நேற்று காலை 6.10 மணியளவில் மறைந்தார் என்ற செய்தி தே.மு.தி.கவுக்கும், திரையுலகுக்கும், உலகில் உள்ள அனைத்து தமிழக மக்களுக்கும் பேரிழப்பாகும்.

மறைந்த விஜயகாந்தின் உடலுக்கு பொதுமக்கள், கட்சித் தொண்டர்கள், அரசியல் பிரமுகர்கள், திரையுலக பிரபலங்கள் மற்றும் கலைத்துறையைச் சேர்ந்த அனைத்து தொழில்நுட்பக் கலைஞர்களும் இறுதி அஞ்சலி செலுத் துவதற்காக, சென்னை தீவுத் திடலில் இன்று வெள்ளக்கிழமை காலை 6 மணியிலிருந்து மதியம் 1 மணி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக் கப்படுகிறது.

தலைவர் விஜயகாந்தின் இறுதி ஊர்வலம் தீவுத் திடலில் இருந்து மதியம் 1 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு பூந்தமல்லி சாலை வழியாக தே.மு.தி.க. தலைமை அலுவலகம் வந்தடைந்து, இறுதிச் சடங்கானது 4.45 மணியளவில் தே.மு.தி.க. தலைமை கழக வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்படும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, விஜயகாந்தின் உடல் நேற்று சாலிகிராமம் பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு அஞ்சலிக்காக எடுத்து செல்லப்பட்டு, பின்னர் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலை மையகத்தில் பொது மக்கள் அஞ் சலிக்காக வைக்கப்பட்டது.

# நடிகர் விஜயகாந்தின் மறைவு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது

## - பிரதமர் நரேந்திர மோடி இரங்கல்

விஜயகாந்தின் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள் ளார். நண்பர் விஜயகாந்த் ஒரு சிறந்த நடிகர், நீடித்த அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தியவர் என்று பிரதமர் புகழஞ் சலி செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிடுகையில்,

"விஜயகாந்த் மறைவு செய்தி கேட்டு மிகுந்த துயரம் அடைந்தேன். தமிழ் சினிமாவின் ஆளுமைகளின் ஒருவரான விஜயகாந்த் தனது சிறந்த நடிப்பின் மூலம் கோடிக்கணக்கான இதயங்களை கவர்ந்துள்ளார்.

அரசியல் தலைவராக தமிழக அரசிய லில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியி ருந்தார். அவரது மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளது. எனது நெருங்கிய நண்பராக இருந்தவர்.

கடந்த காலங்களில் அவருடனான சந்திப்புகளை நினைவுகூர்கிறேன். மிகுந்த வருத்தத்திற்குரிய இந்த தரு ணத்தில் அவரது குடும்பத்தினர், ரசிகர்கள் மற்றும் தொண்டர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

# பெஞ்சமின் நெதன்யாகு ஹிட்லருக்கு சமனானவர்! - துருக்கி ஜனாதிபதி விமர்சனம்



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஹிட்லரிலிருந்து வேறுபட்டவர் அல்ல என துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

அங்காராவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே துருக்கி ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

காசா மீதான இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதல்களும், பலஸ்தீன பொதுமக்களை அப்பட்டமாக கொன்று குவிப்பதும், யூத மக்களை ஹிட் லரின் கொடூரமான கொலைக்கு சமம் என்று எர்டோகன் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, ஹமாஸ் அமைப்பினரைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல்களால் காசா பகுதியில் பலஸ்தீன குழந்தைகள் மற்றும் பெண்கள் உயிரிழந்ததை சகித்துக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உட்பட காசா பகுதி மீதான தாக்குதலுக்கு உத்தரவிட்டவர்கள் அனைவரையும் சகித்துக் கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

அத்துடன், இஸ்ரேலின் போருக்கு மத்தியில் காசாவில் மோதல்கள் குறித்த கருத்துக்களால் துன்புறுத்தலுக்கு உள்ளான கல்வியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளை வரவேற்க துருக்கி தயாராக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

போருக்குப் பின்னர் காசாவின் ஆட்சி மற்றும் எதிர்காலம் பலஸ்தீனியர்களால் மட்டுமே தீர்மானிக்கப்படும் என்றும் வேறு யாராலும் தீர்மானிக்க முடியாது எனவும் எர்டோகன் மேலும் எடுத்துரைத்தார்.

இதேவேளை இஸ்ரேல் பலஸ்தீனியர்களுடன் அமைதியான எதிர்காலத்தை எவ்வாறு உருவாக்குவது என்று சிந்திக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

# பணப்பரிமாற்ற நிலையங்களை குறிவைத்து காசாவில் இஸ்ரேல் வான் வழித்தாக்குதல்

காசாவின் மத்திய பகுதியில் தொடர்ந்தும் இஸ்ரேல் வான் வழித்தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றது.

இதேவேளை, காசாவின் பணப் பரிமாற்ற நிலையங்களை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது என தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன், பணப்பரிமாற்ற நிலையங்களில் இருந்து சுமார் 2.5 மில்லியன் டொலர்களை இஸ்ரேலிய படைகள் கைப்பற்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இஸ்ரேலின் தாக்குதலினால் காசாவை விட்டு அதிகமான மக்கள் வெளியேறி வருகின்றனர் என உலக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, நேற்று முன்தினம்



மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதலில் 7 இற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

ஜப்பானின் குரில் தீவுகளில் இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன என தேசிய நிலஅதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் குரில் தீவுகளில் 6.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட அடுத்த சில நிமிடங்களில் அதே பகுதியில் மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் முறையே 10 கிலோ மீற்றர் மற்றும் 40 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

எனினும் நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# அம்பாறை மாவட்டத்தில் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக மழை பெய்து வந்த நிலையில் தற்போது கனமழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

இதனால் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களான நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் பெருக ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சியாகக் கன மழை பெய்வதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சில தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கிக் கிடப்பதால் டெங்கு நோய் பெருகக் கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் நடைபெறும் இடங்களுக்கு கூட்டம் கூட்டமாக பார்வையிடச் செல்வதை தவிர்த்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.







# பாசிக்குடாவில் அதிக மழை

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சம் 82 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பாசிக்குடா பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இதேவேளை மழைவீழ்ச்சியை அளவிடும் பிரதேசங்களான மயிலம்பாவெளியில் 81 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உறுகாமத்தில் 73.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், வாகனேரியில் 66.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மட்டக்களப்பில் 62.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உன்னிச்சையில் 40 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் குறைந்த மழை வீழ்ச்சியாக கட்டுமுறிவு பிரதேசத்தில் 18.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி ரமேஸ் சுப்பிரமணியம் மாவட்ட ஊடகப்பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தல் அணுகுமுறை; தமிழ்த் தரப்புகள் ஒன்றித்து முடிவு!

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் அவசரப்படவேண்டாம் என்றும், தேர்தலை பகிஷ்கரிப்போம் என்றும் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், தமிழர் தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து தேர்தலின் சாதக பாதகங்களை ஆராய்ந்து, நல்ல முடிவை எடுப்பதே தமிழ்த் தேசிய இனத்திற்கு அனுகூலமாக அமையும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

இலங்கை தமிழ் மக்கள் மத்தியிலும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக கருத்தாடல்கள் நடைபெற்று வருகின்றன. சிங்கள தரப்பிடமிருந்தும் கூட அது தொடர்பான கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான தமிழ் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் பொது மக்களும் அவ்வாறான ஒரு பொது வேட்பாளரின் அவசியம் பற்றி பேசி வருகின்றார்கள். சில கட்சிகளும் சில அமைப்புகளும் மாறுபட்ட கருத்துகளையும் கொண்டிருக்கின்றன.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியைச் சார்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் ஆகியோர் தமிழ் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதை ஏற்றுக்கொண்டிருப்பதுடன், விக்னேஸ்வரன் அவர்களும் அதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இது தொடர்பாக ஒருமித்த கருத்து இல்லாமல் தலைமைச் செயற்பாட்டாளர்களாக இருக்கின்றவர்கள் ஊடகங்களில் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த கஜேந்திரகுமார் அவர்கள் இதனை நிராகரித்து ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வருகின்றார்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் சில பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அதற்கிணங்க தமிழ் மக்கள் வாக்களித்திருந்தாலும் கூட, பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தவில்லை என்பது உண்மையான நிலைப்பாடாகும். அது மாத்திரமல்லாமல், யுத்தம் முடிந்து பதினான்கு வருடங்கள் கழிந்த பின்னரும் இலங்கையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முதன்மையான பிரச்சினையாகத் திகழும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான எத்தகைய நடவடிக்கைகளையும் இவர்கள் மேற்கொள்ளவில்லை.



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோம் என்று அறிவிக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸநாயக்க, பாட்டளி சம்பிக்க ரணவக்க ஆகியோரும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக எந்தவிதமான முன்மொழிவுகளையும் முன்வைக்கவில்லை.

ஆனால் அதே சமயம் ஜனாதிபதியாக வந்த ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு ஆண்டுகளில் நான்கு அல்லது ஐந்துமுறை தமிழர் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடி பல உறுதிமொழிகளைக் கொடுத்தும் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்சம் அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடிய பதின்மூன்றாவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்குக் கூட 2025ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்பு 2026இல் அதுபற்றி ஆலோசிக்கலாம் என்று கூறியுள்ளார்.

இந்த சூழ்நிலையில்தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆலோசிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் சிங்களப் பெரும்பான்மை வாக்குகள் அதிகளவில் சிதறக்கூடிய நிலை தோன்றியுள்ளதால் எந்தவொரு வேட்பாளரும் தனித்து நின்று ஐம்பது வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருக்கும். இத்தகைய பின்புலத்தில் தமிழ் மக்கள் ஒருமித்து ஒன்றாகச் செயற்பட்டு தமக்கு இருக்கக்கூடிய ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை ஒரு பேரம் பேசும் வாக்குகளாக மாற்றிக்கொள்வதற்கு முயற்சிசெய்வதன் மூலம் இவர்களிடமிருந்து சில உரிமைகளையாவது பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கலாம்.

தமிழ் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற கருத்தாடல்கள் சிங்கள அரசியல் கட்சிகள் மத்தியில் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இந்த சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என்ற கருத்தை புறந்தள்ளுவதே தமிழர் தரப்பிற்கு நன்மை பயக்கும்.

சிங்கள தலைமைகள் யாரையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற விடயத்தை தெளிவுபடுத்தும் விதமாக தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரிப்பதன் மூலம் உள்நாட்டிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் பல விடயங்களைச் சூசகமாகச் சொல்ல முடியும்.

இதுவரைகாலமும் தமிழ் அரசியல் தலைமைகள் சிங்கள தரப்புகள் அல்லது அரச தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக எதிர்வினை ஆற்றி வந்துள்ளனவே தவிர, தமிழர் தரப்பினரின் அபிலாசைகளுக்கு ஏற்றவாறு சிங்கள தலைமைகளை மாற்ற முடியவில்லை. ஆனால் இந்த ஜனாதிபதி தேர்தல் ஏற்படுத்திக் கொடுத்துள்ள சாதகமான சூழ்நிலையை, தமிழ் மக்கள் ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான அனுகூலமான சூழலாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் என்பதே எமது முக்கியமான வேண்டுகோளாகும்.

நாங்கள் ஒன்றுபட்டு தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறாமல் கையாளுவதன் ஊடாக, சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களை எமது நிகழ்ச்சிநிரலை நோக்கி வரவழைக்க முடியும். இதனை இப்பொழுதே நாங்கள் ஆரம்பிக்க வேண்டும். சம்பந்தன் அவர்கள் கூறுவது போன்று தேர்தல் அறிவிக்கும் வரையிலும் வேட்பாளர் அறிவிப்பு வெளியாகும் வரையிலும் காத்திருந்து கடைசி நிமிடத்தில் இதனைச் செய்ய முடியாது. இப்பொழுதிருக்கின்ற சூழ்நிலையில் தமிழரசுக் கட்சி முரண்பட்ட கருத்துகளைத் தெரிவிப்பதை விடுத்து, தீர்க்கமான சாதகமான முடிவினை எடுக்குமாக இருந்தால், தமிழ் மக்களின் பேரம்பேசும் சக்தியை ஓரளவிற்கேனும் வலுப்படுத்த முடியும்.

மேற்கண்ட விடயங்களுக்கும் அப்பால் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது மேலும் பல சாதகமான விடயங்களையும் உள்ளடக்கியிருந்தாலும் அவை அனைத்தையும் இன்றைய சூழ்நிலையில் பொதுவெளியில் விவாதிக்க முடியாது. தமிழ் மக்களின் வாக்குகளை நாம் சிதறவிடாமல் ஒன்றுபட்டு பிரயோகிப்பதில் தீர்மானமாக இருந்தால் நாம் அனைவரும் கூடிப்பேசி இதனை இன்னமும் ஆரோக்கியமான முறையில் முன்னெடுக்க முடியும். அரசியல் ரீதியாகக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிடுவது புத்திகூர்மையாகாது. - என்று உள்ளது.



# பஸிலின் பதவி ஆசையாலேயே கோட்டா விரட்டியடிக்கப்பட்டார்

## உண்மையை உடைக்கின்றார் திலித் ஜயவீர

நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டின் ஜனாதிபதியாகத் தான் வருவதற்காகவே பஸில் ராஜபக்ஷவால் கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்டார் என மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானார் என்றும், பொதுஜன பெரமுனவும் தேசியவாத முகாமும் அழிக்கப்பட்டன எனவும் அவர் கூறியுள்ளார்.

பஸில் ராஜபக்ஷவின் ஆட்சிக் கவிழ்ப்பினால் ஏமாற்றமடைந்த பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குழு தற்போது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனக்கு 30 வருடகாலம் அரசியலில் அனுபவம் உள்ளது. நான் ஒரு தேசியவாதியாகவே எனது அரசியல் பயணத்தை முன்னெடுக்க விரும்புகிறேன். தேசியவாத அரசியல் தோல்வியடையக் காரணம் அதனை முறையாகக் கையாளவில்லை என்பதாலேயே ஆகும்.

தேசியவாதத்தை தாண்டி ஒரு நாடால் முன்னேற முடியாது. உலகில் உள்ள அனைத்து நாடுகளும் தேசியவாதத்தைப் பின்பற்றியதால்தான் அவர்களால் வேகமாக முன்னேற முடிந்துள்ளது.

சிலர் தேசியவாதத்தை இனவாதமாக பயன்படுத்தினர். இதனால்தான் எம்மால் தேசியவாதத்தை கையாண்டு எழுச்சியடைய முடியாது போனது. இந்தியா தேசியவாதத்தை பின்பற்றுவதால்தான் இன்று பாரிய அபிவிருத்தியை நோக்கி நகர்ந்துள்ளது.” என்றார்.





# மூதுகடுவ கடலில் காணாமல் போயிருந்த மாணவனின் சடலம் கரையொதுங்கியது!

(ரஸீன் ரஸ்மின்)

மாரவில - மூதுகடுவ கடலில் குளிப்பதற்காகச் சென்று நேற்று முன்தினம் மாலை காணாமல் போன மாணவனின் சடலம் நேற்றுக் (28) கரையொதுங்கியுள்ளது.

மாரவில - முதுகடுவ பகுதியைச் சேர்ந்த சிஸன்சல புஷ்பகுமார (வயது 16) எனும் பாடசாலை மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (27) மாலை 6 மணியளவில் கடலில் நான்கு மாணவர்கள் குளிப்பதற்காக சென்றுள்ளனர்.

இந்த நிலையில் , மாணவர்கள் நால்வரும் குளித்துக் கொண்டிருந்த போது அந்த நால்வரும் அலையில் அடித்துச் செல்லப்பட்டனர். இந்த நிலையில் மீனவர்கள் மற்றும் சிலர் இணைந்து அவர்களில் மூவரைக் காப்பாற்றினர். ஒருவர் காணாமல் போயிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன மாணவனைத் தேடும் நடவடிக்கைகளில் பொலிஸார், கடற்படையினருடன் இணைந்து மீனவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் காணாமல் போன மாணவனின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

# நீதித்துறைக்கு அரசு செவிசாய்க்குமானால் அதனுடன் இணைந்து பணியாற்றத் தயார்!

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

நீதித்துறையின் தீர்மானத்தின் படி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்படுவார்களாயின், அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயார் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்துமஸ் பண்டிகையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.



அத்துடன், பொருளாதார நெருக்கடி போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நேர்மையான முயற்சிகள் மேற்கொளெப்படும் நிலையில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போதைய அரசாங்கம் நீதிமன்றம் வழங்கிய பல்வேறு தீர்ப்புகளை புறக்கணித்துள்ளதாகவும் கர்தினால் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லாட்சியின் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுப்பதற்கு தவறியதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நிலையில், தற்போதைய ஆட்சியாளர்கள் தாக்குதலுக்கு திட்டமிட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு தவறியுள்ளனர் எனப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.






# அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலைகளைக் குறைக்க சதொச முடிவு

அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலைகளை குறைப்பதற்கு சதொச நிறுவனம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, ஆறு அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய டின் மீன் ஒன்றின் விலை 55 ரூபாவினால் குறைக்கப்பட்டு 475 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

உருளைக்கிழங்கு கிலோ ஒன்றின் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டு புதிய விலை 280 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிவப்பு பச்சை அரிசி கிலோ ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 175 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், சிவப்பு பருப்பு, வெள்ளை நாட்டரிசி மற்றும் வெள்ளை பச்சை அரிசி ஆகியவற்றின் விலைகள் தலா ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருள்களை விலைக் குறைப்புடன் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 80 இலட்சம் முட்டைகள் சதொசவுக்கு விநியோகம்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 80 இலட்சம் முட்டைகள் லங்கா சதொச நிறுவனத்துக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

மக்கள் தமது தேவைக்கு ஏற்ப முட்டைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் லங்கா சதொச நிறுவனத்துக்கு நாளாந்தம் விநியோகிக்கப்படும் 10 இலட்சம் வரையிலான முட்டைகள் எதிர்வரும் 31 ஆம் திகதியாகும் போது 20 இலட்சம் வரை அதிகரிக்கி கூடியதாக இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு தேவையான முட்டைத் தொகையை இறக்குமதி செய்வதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனவரி மாதத்தில் மேலும் 3 கோடி முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் செலுத்துகின்றனர் என லங்கா சதொச அறிவித்துள்ளது.




# டெங்குத் தொற்றாளர் அதிகரிப்பு; கண்காணிப்பதில் பிரச்சினைகள்!

## மரண வீதம் அதிகரிக்க இதுவும் காரணம் என்கிறார் கேதீஸ்வரன்

(எஸ்.நிதர்ஸன்)

வைத்தியசாலையில் அனுமதிக் கப்படும் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதால் கண்காணிப்பதில் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இதுவும் மரண வீதம் மரண வீதம் அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாக உள்ளது.

யாழ். மாவட்டத்தில் தொடரும் அசாதரணமான மழை வீழ்ச்சியும் டெங்கு தொற்றின் தாக்கம் அதிகரிப்பதற்கு காரணம்.

இவ்வாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் சுடிக்காட்டியுள்ளார்.

நேற்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இடம்பெற்றது. இதில் டெங்கு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



இந்த முறை சிறிய நீர் உள்ள இடங்களிலும் டெங்கு நுளம்பு பெருகும் நிலை காணப்படுகின்றது. கடந்த இரண்டு மாதங்களிலேயே தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் தாக்கத்துக்கு உள்ளாகும் நோயாளியைச் சீராகக் கண்காணித்து வந்தால் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

ஆனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதால் கண்காணிப்பதில் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இதனால் மரண வீதம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக இந்த மாதத்தில் மட்டும் டெங்கு தொற்றால் நால்வர் பலியாகியுள்ளனர். இதேநேரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் நான்கு பிரதேச வைத்தியசாலைகளிலும் இதற்கான சிகிச்சைகள் முன்னெடுப்பதற்கான அனைத்து வசதிகளும் உள்ளன. இதேநேரம் விசேட விழிப்பூட்டல், மக்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது யாழ். போதனா வைத்தியசாலையில் இரு விடுதிகள் டெங்கு நோயாளர்களுக்கு என்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதனைக் கண்காணிப்பதற்காக 60 வைத்திய மற்றும் பராமரிப்பு ஊழியர்கள் விசேடமாகப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டெங்கு உதவியாளர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்குப் பணியாளர்களாகப் பயிற்சி பெற்ற 53 பேரையும் நிரந்தரமாக்குதல் வேண்டும். இதன் மூலம் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும்.– என்றார்.

# வல்வை ஆலயத்தில் தேவாரம் பாடியவர் மயங்கி விழுந்து சாவு

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் ஆலயமொன்றில் தேவாரம் பாடிக்கொண்டிருந்த வேளை திடீரென மயங்கி சரிந்தவர் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறைச் சேர்ந்த சி.இராசரத்தினம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயத்திற்கு தினமும் சென்று தேவாரம் ஓதி வரும் நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமையும் வழமை போன்று ஆலயத்திற்கு சென்று தேவாரம் ஓதிக்கொண்டிருந்த வேளை மயங்கி விழுந்துள்ளார்.

அதனையடுத்து அவரை வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.




# லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தலைவரும் உறுப்பினர்களும் நியமனம்

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய தலைவராக நீதியரசர் டபிள்யூ.எம்.என்.பி.இத்தாவல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக சேத்தியா குணசேகர மற்றும் பெர்னாட் ராஜபக்ஷ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# தரமற்ற மருந்துக் கொள்வனவு; மூவரின் மீது குற்றச்சாட்டுகள்!

## அரச மருத்துவர் போரம் சுமத்துகின்றது




தரமற்ற மருந்துக் கொள்வனவு தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் போரத்தின் தலைவர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன நேற்று வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள வளாகத்துக்கு வெளியில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் சமன் ரத்நாயக்க மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரி சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் குணசேகர ஆகியோர் இந்தத் தரமற்ற மருந்துக் கொள்வனவின் மூளையாகச் செயற்பட்டனர் எனக் குற்றம் சுமத்தினார்.

இதுவரை, இந்த விவகாரம் தொடர்பாக சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த, சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் அதே பிரிவைச் சேர்ந்த மேலும் சில அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இவர்கள் அனைவரும் ஜனவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை ஒன்பது மாவட்டங்களில் அதிகரிப்பு

நாட்டில் 9 மாவட்டங்களில் தட்டம்மை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தட்டம்மை நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் கல்முனையிலும் இந்த தடுப்பூசி ஏற்றும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த திட்டம் ஜனவரி 06 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

2019 ஆம் ஆண்டில் தட்டம்மை நோயை ஒழித்த நாடாக இலங்கையை உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது.

# இவ்வருடம் 800 பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறினராம்




இந்த வருடம் எண்ணூறுக்கும் மேற்பட்ட பல்கலைக் கழக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

சுமார் ஆயிரம் பேர் வெளிநாடுகளில் விடுமுறையில் இருக்கின்றனர் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.

இதனால் பல்கலைக்கழக நடவடிக்கைகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் எண்ணிக்கை 6,200 ஆக காணப்பட்டது.

# 15 கொள்கலன்களில் மருந்துகள் துறைமுகத்தில் சிக்கியுள்ளனவாம்

இறக்குமதி செய்யப்பட்ட 15 கொள்கலன் மருந்துகள் தற்போது துறைமுகத்தில் சிக்கியுள்ளன என சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினர் இறக்குமதி செய்த மருந்துகளே இவ்வாறு துறைமுகத்தில் சிக்கியுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி மருந்து நிறுவனங்களின் பதிவு உள்ளிட்ட பல சிக்கல்களினால் இவற்றை விடுவிக்க முடியாதுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிக்கல் நிலை தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.12.2023

## மேஷம்

இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இருப்பினும் மேற்கொண்டு செல்வதற்கு சில உந்துதல்கள் தேவைப்படுகின்றது. இன்று உங்கள் பொறுமை சோதனைக் குள்ளாகும்.

பணியிடத்தில் பொறுமை தேவை. பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கடினமாக உழைக்க வேண்டும்.

நல்லுறவை ஏற்படுத்த துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த அணுகுமுறை மகிழ்ச்சியயை ஏற்படுத்தும்.

நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன்கள் வாங்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நம்பிக்கை மனப்பான்மை ஆரோக்கியத்தை தக்க வைக்கும்.

## ரிஷபம்

இன்று நிலுவையில் உள்ள பணிகளை செய்வதற்கு உந்துதல் கிடைக்கும். உங்கள் முயற்சி மூலம் இன்றைய நாளை வளமாக்கலாம்.

நீங்கள் செய்யும் பணி உங்களுக்குத் திருப்தி அளிக்கும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையை நீங்கள் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவரை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் திருப்தி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## மிதுனம்

இன்றைய நாள் மிதமான பலன்களைத் தரும். யதார்த்தமான அணுகுமுறை மூலம் நீங்கள் நல்ல பலன்களைக் காணலாம். எதிர்மறை எண்ணங்களை கைவிடுங்கள்.

பணியிடத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். இதனை சமாளிக்க நீங்கள் திட்டமிட வேண்டும். சிறப்பான முறையில் தகவல்களைப் பரிமாற்ற வேண்டும்.

உறவில் நல்லிணக்கத்தைப் பேண எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களுக்கும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

## கடகம்

ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். இதனால் நற்பலன்கள் கிடைக்கும். எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனை தவிர்த்துவிடுங்கள். இன்று முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

பணியில் கவனம் செலுத்துங்கள். கவனச் சிதறலால் தவறுகள் ஏற்படும்.

உறவின் நல்லிணக்கத்தை தக்க வைக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் மகிழ்ச்சி கெட வாய்ப்புள்ளது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் ஆடம்பர செலவுகளை விட்டுக்கொடுக்க வேண்டும்.

ஜீரணக் கோளாறு, தோள் வலி போன்ற உபாதைகள் ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியமாக உணரலாம்.

## சிம்மம்

இன்று வெற்றி பெறுவதற்கு யதார்த்தமான அணுகுமுறை தேவை. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலாது. பணிகளைக் கையாளும் போது தவறுகள் நேராத வண்ணம் கவனம் தேவை.

உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இந்த அணுகுமுறையால் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை தக்க வைத்துக்கொள்ளும் வகை அறிய வேண்டும்.

தொண்டை பாதிப்புகளுக்கு ஆளாக நேரலாம். கண்களில் எரிச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதால் கண் சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

## கன்னி

இன்று உற்சாகமான நாள். இன்றைய நாளை திருப்தியுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணிச்சூழல் ஆக்கப்பூர்வமான பலன்களைத் தரும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

உங்களின் சகஜமான அணுகுமுறை மூலம் உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. பணத்தை சேமிக்கும் நல்ல சூழ்நிலை காணப்படுகின்றது.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாமல் இருந்தால் இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொடர்ச்சியான தியானப் பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.

## துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். புதிய நண்பர்கள் மற்றும் புதிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும்.

பணிகளை எளிதாக முடிப்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் பணிக்கு நல்ல கருத்துக் கணிப்பு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு வலுப்படும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பக்திப் பாடல்கள், ஸ்லோகங்கள் கேட்பதன் மூலம் இன்னும் ஆரோக்கியமாக இருக்கலாம்.

## விருச்சிகம்

உங்கள் செயல்களை ஆற்றும் பொழுது கவனமாக இருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்கக் கூடாது.

பணியிடத்தில் நல்ல பலன்களைப் பெற அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சிறந்த பணி நடைமுறைகளை உருவாக்கி உங்கள் திறமைகளை நீங்கள் பயன்படுத்தலாம்.

உங்கள் துணையைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யவேண்டும். உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக காணப்படாது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று நீங்கள் எளிதில் சோர்வடைவீர்கள். தோல் ஒவ்வாமையிலிருந்து தப்பிக்க எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.12.2023




இன்று சுமாரான நாள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உறுதி யுடன் இருக்க வேண்டியது அவசி யம்.

பணியிடத்தில் பதட்டமான நிலை காணப்படும். பணிச்சுமையை சமாளிக்க சிறப்புடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிக்க விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமானதாக இல்லை. உங்கள்ால் முடிந்த அளவு சேமிக்க வேண் டும்.

பதட்டப்படாமல் இருங்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் சாதகமான நாள். இன்று கூடுதல் பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு திட்டமிடலாம்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப் படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மற்றும் கட்டுப்பாடு மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவு பரா மரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வழியில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். யோகா பயிற்சி சிறந்த பலனைத் தரும்.




உங்கள் முயற்சியில் வெற்றி பெற உகந்த நாள். உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். இன்று நற் பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வெற்றி கிடைக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவு காணப்படும். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சுமாராக இருக்கும். கவனக் குறைவாக இருந்தால் சில சிறந்த வாய்ப்புகளை இழக்க நேரலாம். எனவே நகைச்சுவையுடன் கூடிய அணுகுமுறை திருப்தியை அளிக்கும்.

உங்கள் கீழ் பணி புரிபவர்களால் சில தொல்லைகளை சந்திக்க நேரும். பணிச்சுமை அதிக மாக காணப்படும். பணிகளை கவனமுடன் கையாள வேண்டும்.

நட்பான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் இருவரும் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள லாம். நல்லுறவுக்கு இது மிகவும் அவசியம்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் கண்களை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தியானப் பயிற்சி மூலம் அமைதி பெறலாம்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# மூளைக்காய்ச்சல் ஆபத்துள்ள சிறைகளுக்கு நோயெதிர்ப்பு மருந்து வழங்குவதற்கு முடிவு

நாடளாவிய ரீதியில் மூளைக் காய்ச்சல் தொடர்பான ஆபத்தில் உள்ளவை எனச் சந்தேகிக்கப்படும் சிறைச்சாலைகளுக்கு மூளைக் காய்ச் சலுக்கான நோயெதிர்ப்பு மருந்து களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத்திட்டம் இந்த வாரத்திற்குள் நடைமுறைப்படுத் தப்படும் என சிறைச்சாலைகள் சுகா தார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது மாத்தறை சிறைச்சாலைக்கு கைதிகளை அனுப்பும் செயற்பாடு கள் நிறுத்தப்பட்டு புதிய கைதிகள் அங்குனுகொலபலஸ்ஸ சிறைச் சாலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

மாத்தறை சிறைச்சாலையின் கைதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு இந்த நோயெதிர்ப்பு மருந்துகள் வழங்கப் பட்டுள்ளன எனவும் பணிப்பாளர் குறிப் பிட்டார்.

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் அதிகளவில் இந்த பாதிப்பை எதிர்நோக்குகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மாத்தறை சிறைச்சாலையிலுள்ள நோய்வாய்ப்பட்ட கைதிகள் பலரிட மிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில் ஒரு மாதிரியில் மூளைக் காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

# தலைமன்னார் செல்வேரி கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு!



**(மன்னார் நிருபர்)**

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செல்வேரி கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிலிருந்து நேற்றுக் காலை குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மரியதாஸ் றொனால்ட் ரீகன் (வயது-43) என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கூலி தொழிலாளி என்று தெரிய வந்துள்ளது.

அண்மையில் பெய்து வரும் கன மழை காரணமாக இந்தக் கிராமத்தில் உள்ள சுமார் 20 இற்கும் மேற்பட்ட வீடுகள் மழை வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.

மழை வெள்ளத்தில் பாதிக்கப் பட்டுள்ள தனது வீட்டில் கடந்த 26 ஆம் திகதி இரவு தனது வேலையை முடித்த நிலையில் இவர் உறக்கத்துக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் நேற்று வியாழக்கிழமை காலை குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

அந்த நபரை கடந்த இரண்டு நாள்கள் காணாத நிலையில், உயிரி ழந்த நபரின் நண்பர் ஒருவர் நேற்றுக் காலை அவரது வீட்டுக்குச் சென்று பார்த்த போது மழை வெள்ளத்தில் அவர் இறந்து கிடந்துள்ளார்.

இதனையடுத்து உறவினர்களுக்கும் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டது.

இந்த நபர் வலிப்பு நோய் காரண மாக சிகிச்சை பெற்று வருபவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைவி, பிள்ளைகள் மழை வெள்ளம் காரணமாக அருகாமையில் வீடு ஒன்றில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பில் மேலதிக விசார ணைகளைத் தலைமன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# மேலும் ஒரு கொவிட் மரணம் கம்பஹா ஆஸ்பத்திரியில் பதிவு

கம்பஹா போதனா வைத்தியசாலையில் கொவிட் மரணம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரத்துக்குள் பதிவான இரண்டாவது கொவிட் மரணம் இதுவாகும்.

இதேவேளை, தற்பொழுது குழந்தைகளிடையே பல வகையான சுவாச நோய்கள் பரவி வருகின்றன என குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பரிசோதிக்கப்பட்ட குழந்தைகளில், பெரும்பாலானவர்களுக்கு இன்ப்ளூவன்ஸா வைரஸ் காணப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த சில நாட்களாக குழந்தைகளுக்கு மேல் சுவாசக் குழாயில் பல வேறு நோய்கள் பரவி வருகின்றன.

குறிப்பாக வைரஸ் காய்ச்சல்கள். இருமல், சளி, வாந்தி, தலைவலி போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

# புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் கதிரியக்க சிகிச்சை சேவை பாதிப்பு!



புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் கதிரியக்க சிகிச்சை சேவை தற்போது பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளது என வைத்தியர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் கதிரியக்க சிகிச்சை இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமையே இதற்குக் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அபெக்ஷா மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் தலா ஒரு கதிரியக்க சிகிச்சை இயந்திரமும், கண்டி தேசிய வைத்தியசாலையில் இரண்டு கதிரியக்க சிகிச்சை இயந்திரங்களும் பழுதடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, சிகிச்சைகளுக்காக வருகை தரும் நோயாளர்களும் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட சிறுவன் வடமராட்சியில் கைது



**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிச. 29

வடமராட்சி வேம்படிப் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 14 வயதுச் சிறுவன் ஒருவன் நேற்றைய தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்ட சிறுவனின் தாயாரே கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நிலையில் தாயார் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கிறார் எனக் கூறப்படுகின்றது. தாயார் மறைத்து வைத்த பொருளை எடுத்து விற்பனை செய்தான் என சிறுவன் மீது பொலிஸ் குற்றம் சாட்டுகின்றனர்.

குற்றம் சாட்டப்படும் சிறுவன் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கிளிநொச்சியில் நிவாரணப்பணி



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.29

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் லண்டன், வோல்த்தம்ஸ்ரோங் கற்பக விநாயகர் ஆலய நிதிப்பங்களிப்பில் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

பொன்னகர், பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய கிராமங்களில், வெள்ளப் பாதிப்பை எதிர்கொண்டுள்ள 200 குடும்பங்களுக்கு, நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஒழுங்கமைப்பில் வழங்கிவைக்கப்பட்டன.

இயற்கை அனர்த்தப் பாதிப்புகள், கொரோனாப் பெருந்தொற்று கால அவசர உதவிகள் உட்பட கிளிநொச்சி மாவட்ட மக்கள் நலன்சார் மனித நேயப்பணிகள் வோல்த்தம்ஸ்ரோங் கற்பக விநாயகர் ஆலயத்தின் நிறுவுநர் முருகுப்பிள்ளை கோபாலகிருஷ்ணனின் ஏற்பாட்டில்,

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











